**24-05-2012 அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு**

**தலைப்பு : தம்புள்ள பிரச்சனையும் இலங்கையில் அண்மைக்காலத்தில் ஏற்பட்டுள்ள மத முறுகல் நிலையும்**

**தொடக்கவுரையாடல் : பதீக் அபூபக்கர்**

இலங்கையில் தொடர்ந்து முஸ்லிம் இந்து கிறிஸ்தவ மத வழிபாட்டிடங்களின் மீது நிகழும் பௌத்த ஆக்கிரமிப்புக்களும் தாக்குதல்களும் ஒட்டுமொத்தச் சிங்கள பௌத்தர்களினதும் ஒருமித்த செயலாகக் கருதிவிடமுடியாது.

அவை அவர்களுள் பெரும்பான்மையானவர்களின் மிதவாத ஜனநாயகப் போக்கினை அவமதிக்கின்ற செயலாகவே கருதப்பட முடியுமானவை.

தம்புள்ளைப் பள்ளிவாயல் அத்துமீறல் சம்பவமானது உண்மையான மதம்/ஆன்மீகம் சார்ந்த ஒரு பௌத்தத் தலையீடு கிடையாது. அது வெறுமனே ஓர் அரசியல் நிகழ்ச்சி நிரலாகவே புரிந்துகொள்ளப்பட வேண்டியது.

இலங்கை முஸ்லிம் பிரதிநிதிகள் மதத் தலைவர்களின் பேரினவாதச் சார்புப் போக்கானது கடந்த கால அரசியலிலும் சரி சமகால அரசியலிலும் சரி பௌதீக இலாபங்களைப் பெற்றுத்தந்திருந்தாலும் இச் சம்பவங்கள் போன்ற அடிப்படை உரிமை மீறல்களிலும் கூட அதிகாரத்துக்கு ஒடுங்கியேயிருக்க வேண்டியது நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறது.

தம்புள்ளைப் பள்ளிவாயல் மற்றும் கோயில் என்பவை பற்றிய சரியான தரவுகள், வரலாறு, அங்கே வணக்கஸ்தலங்கள் தோன்றிய பின்னணி, அவ்விடத்தில் வாழும் இந்து மற்றும் இஸ்லாமிய குடியிருப்புக்கள் என எல்லா அவசியமான தரவுகளையும் பெரும்பான்மைச் சிங்கள பௌத்தர்களோடு பகிர்ந்து கொள்ளவும் அதுபற்றி அவர்களோடு உரையாடல்களைச் செய்யவும் ஆவன செய்யப்படவேண்டும்.


இலங்கையில் பொருளாதார வீழ்ச்சி, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, தனிமனித சுதந்திரமின்மை என எல்லா மக்களுக்குமிருக்கின்ற தேசியப் பிரச்சினைகளோடு சேர்த்தே பௌத்த அடிப்படைவாத நிகழ்வுகளும் உரையாடப்படவேண்டும்.

மதவுரிமையென்பது யாப்பில் உறுதியளிக்கப்பட்டுப் பாதுகாப்பளிக்கப்பட்டிருக்கின்ற போது அது எந்தவொரு மத நம்பிக்கையாளருக்கு நிகழும் போதும் மீறப்படுகின்ற அடிப்படைஉரிமைக்காகக் குரல்கொடுப்பது அனைவருக்குமிருக்கம் பொறுப்பாகும்.

இலங்கை அரசியலில் தமிழ்த் தலைமைத்துவங்களால் முஸ்லிம் இனத்தின் இருப்பு புறக்கணிக்கப்பட்டமையாலேயே அரசியலில் முஸ்லிம்கள் தமக்கான தனி அடையாளத்தினைத் தேடவேண்டிய நிர்ப்பந்தத்துக் குள்ளாகின்றனர்.

அப்போதிருந்த தமிழ்த் தலைவர்களின் சாதிய மனப்போக்கு முஸ்லிம்களின் மதம்சார்ந்த அடையாளத்தினை அரசியல் அடையாளமாகவும் தேர்ந்தெடுக்கச் செய்தது.





நகுலன்

நகுலன் (இ. மே 17, 2007) தமிழ் எழுத்தாளர்.

டி. கே. துரைசாமி என்ற இயற்பெயர் கொண்ட நகுலன் பிறந்தது தமிழ்நாட்டில் உள்ள கும்பகோணத்தில் ஆனாலும் இறுதிவரை வாழ்ந்தது கேரளத்தின் திருவனந்தபுரத்தில். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழில் முதுகலைப் பட்டம் பெற்றவர். ஆங்கிலத்தில் முதுகலையும் ஆராச்சிப் பட்டமும் பெற்றவர். திருவனந்தபுரம் இவானியர் கல்லூரியில் ஆங்கிலப் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

தமிழ்ச் சிறுகதைகளில் பல புதிய பரிசோதனைகள் செய்தவர். பழந்தமிழ் இலக்கியத்திலும் நவீன ஆங்கில இலக்கியத்திலும் மிகுந்த ஈடுபாடுகொண்டவர். 'எழுத்து' இதழில் எழுதத் துவங்கியவர். இவர் தொகுத்த 'குருஷேத்திரம்' இலக்கியத் தொகுப்பு, தமிழில் மிக முக்கியமானதாகும். விளக்கு விருது, ஆசான் விருது உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றவர் நகுலன்.

**சமூக விஞ்ஞான கற்கை வட்டம்**

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை

0772307807
0772260165

**Facebook group :**
facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் :
circle.thulaa.net

**வேலு நாச்சியார்!** கணவனை இழந்த பின்னும் வீரத்தால் உயர்ந்து சரித்திரத்தில் நிலைத்திருக்கும் வீராங்கனையான, சிவகங்கைச் சீமையை ஆண்ட வேலுநாச்சியாரின் உண்மைச்சரிதம் கூறும் நூல். சில மணிநேரங்களிலேயே படித்து முடித்துவிடக்கூடியவாறு கைக்கடக்கமான சிறிய நூலானாலும் கருத்துச் செறிவு வாய்ந்தது.

சிவகங்கையின் அரசனான முத்து வடுகநாதர் 1772 இல் ஆங்கிலப்படையினரால் கொல்லப்பட, அவரது மனைவி வேலு நாச்சியார் அரண்மனையில் இருந்து தப்பித்துச் சிறுகச் சிறுகப் படை திரட்டி 7 ஆண்டுகளுக்குப்பின் சிவகங்கைமீது படையெடுத்து ஆங்கிலப்படையைத் தோற்கடிக்கும் வரலாறு கூறும் சுவாரஸ்யமும் வீரமும் கலந்த இந்த நூலின் உயிராக விளங்கும் சம்பவம் என்னை ரொம்பவும் கவர்ந்தது. படையெடுப்புக்கு ஓர் விஜயதசமி நாளைத் தேர்ந்தெடுத்துத் தன் பெண் படைகளுடன் பக்தர்களைப்போல் கோட்டைக்குள் புகும் வேலுநாச்சியார்(வயது 50 ) ஆங்கிலத் தளபதி பான்ஜோருடன் ஆயுதமேந்திப் போராடும் அதேவேளை, அவரது படையில் இருக்கும் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த குயிலி என்னும் பெண், தற்கொலைப் படை வீராங்கனையாகச் செயற்பட்டு தன் உடம்பில் தானே தீவைத்துக்கொண்டு ஆங்கிலேயரின் ஆயுதக்கிடங்கில் குதித்து மாய்கிறார்.

ஆனால், இந்த சரித்திர நாயகியின் இறுதிக்கட்டம் சோகமயமானது , சூழ்ச்சிகளால் வீழ்த்தப்பட்டது. யுத்தத்தின் போது நாச்சியாருடன் உடன் இருந்தவர்களது சதியினால் ஒன்பது ஆண்டுகள் நிலவிய தன் நல்லாட்சியை, தன் ஒரே மகளை, பேரக்குழந்தையை இழந்து 1796 இல் அனாதையாய் இறந்துபோகிறார்.

இன்னுமே எங்கள் பெண் குழந்தைகளுக்கு " Cinderella " கதைகளை சொல்லித்தான் (நான் வளர்க்கப் பட்டதுபோல் ) வளர்க்கிறோமேயொழிய, அவர்களது ஆளுமையை விருத்தி செய்யும், தன்னம்பிக்கையையும் வீரத்தையும் வளர்க்கும் இம்மாதிரியான நிஜ வரலாற்று நாயகிகளின் வீரக் கதைகளைச் சொல்லி வளர்க்கத் தவறிவிடுகிறோம்.

எதிர்காலத்தில் நான் என் மகளுக்கு Cinderella கதைகளையோ, இந்து மத அஹிம்சாவாதி நாயகிகளின் கதைகளையோ நிச்சயமாய் கூறி வளர்க்கப்போவதில்லை.

-பிரியா இராமநாதன் (Facebook இல் பகிர்ந்த குறிப்பு)

04 - 06 - 2012

**முருகையன் நினைவோடு...**

கவிதை ஆற்றுகை

**"இரண்டாயிரம் ஆண்டுகாலப் பழைய சுமை எங்களுக்கு"**

மௌ.மதுவர்மன்

உரை

**"முருகையன் கவிதைகள்"**

சோ.முரளி

கவியரங்கம்

**"கழுதைக் காதுகள்"**

லோ.நிலா

**"மனமிசை உற்ற பலம்"**

ச.சுதாகர்

**"எங்கள் முற்றம்"**

தி.பவித்திரன்

## இளைஞர்களிடையே காணப்படும் வெளிநாட்டு மோகம்

(இந்த வாரம் கலந்துரையாடப்படவுள்ள விடயப்பரப்பு )

1. யுத்த காலமும் யுத்தத்திற்குப் பின்னான இளைஞர்களுக்கான வெற்றிடமும்

2. வெளிநாடு என்பதன் பொதுப்புத்தி.

3. இலகு வழியில் பணம் சம்பாதிப்பது, வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புக்கள்.

4. பாதுகாப்பான சூழல் ஒன்றைத் தேடித் போதல்.

5. இளைஞர்களுக்கான கனவு எங்கிருக்கிறது ?

6. வெளிநாடு எதனால் மோகிக்கக் கூடியவாறு இருக்கிறது ?

7. புறநாட்டுக் கலாசாரம்.


8. தஞ்சக் கேடு.

9. இளைஞர்களது வெளியேற்றத்தால் நாடு எதிர்கொள்ளும் பிரச்சனைகள்

10. சட்டவிரோத வெளிநாட்டு குடிபெயர்வு, சட்டங்களுக்குட்பட்ட குடி பெயர்வின் போதான மோசடிகள், அவை தொடர்பான பாதுகாப்புச் சட்டங்கள், அவற்றுக்கான அமைப்புக்கள்.

11. வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதோடு லாபம் ஈட்டும் அரச அரச சார்பற்ற தொழில் நிறுவனக்கள்.

12. கல்வி வணிகத்தை நிலைநாட்டும் சர்வதேச கல்வி நிறுவனக்கள், இலங்கை உயர்கல்வி அமைப்பு முறை.




நன்றி: தமிழ்மிரர்

சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.
BY NC SA